**எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவுக்கு எதிரான உலக நிதிய (ஜீஎவ்ஏரீஎம்) செயற்திட்டத்தின் சுகாதார முறைமையைப் பலப்படுத்தும் ஆக்ககூறின் 2013**

---

எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவுக்கு எதிரான உலக நிதிய (ஜீஎவ்ஏரீஎம்) செயற்திட்டத்தின் சுகாதார முறைமையைப் பலப்படுத்தும் ஆக்ககூறின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு (ஜீஓஎஸ்எல்) மற்றும் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவிற்கு எதிரான உலக நிதியத்திற்குமிடையில் (ஜீஎவ்ஏரீஎம்) கைச்சாத்திடப்பட்ட 2011 நவம்பர் 22 ஆம் திகதிய எஸ்ஆர்எல்-911-ஜீ15-எஸ் ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் சீ(8) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினுடைய அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் நோக்கெல்லை மற்றும் நடவடிக்கைகள், பாதீடுகள், எல்லைக்குறியீடுகள், மற்றும் சுட்டிகள் முதலியன உள்ளடங்கலாக செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்குவதற்கு சுகாதார அமைச்சுப் பொறுப்பாகும் மற்றும் சுகாதார நலனோம்பு சேவைகளின் விரைவான மறுசீரமைப்பின் மூலம் வடக்கு மாகாணத்தின் மோதலிற்கு பிந்திய பிரதேசத்தில் எச்ஐவீ/எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவின் நடைமுறையிலுள்ள குறைந்தளவான முந்திய மட்டத்தை பேணுவது செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 15,513,020 ஆகும். செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2011 யூலை 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2016 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த

முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம், செயற்திட்டத்தால் பேணப்பட்ட விரிவான நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழான பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்றும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

## 3. அபிப்பிராயம்

-----------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க 2013 டிசெம்பர்

31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் தரப்பட்ட தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 226,127,425 (ஐ.அ.டொலர் 1,751,401) தொகையானதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 474,254,086 தொகையாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளது.

| வகுதி | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | | | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|---|---|
| | 2013 | | 2012 | | |
| | ஐ.அ.டொலர் | ரூபா | ஐ.அ.டொலர் | ரூபா | ரூபா |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | 13,128 | 1,716,492 | 12,813 | 1,675,316 | 3,391,808 |
| சுகாதார முறைமையை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் | 1,738,273 | 224,410,933 | 1,853,510 | 236,507,882 | 470,862,278 |
| | 1,751,401 | 226,127,425 | 1,866,323 | 238,183,198 | 474,254,086 |

### 4.2 காசோட்டக் கூற்று

செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின்படி, காசோட்டத்தின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | | | |
|---|---|---|---|---|
| | 2013 | | 2012 | |
| | ஐ.அ.டொலர் | ரூபா | ஐ.அ.டொலர் | ரூபா |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம் | | | | |
| வெளிநாட்டு மானியத்திலிருந்து கிடைத்த காசு (வாக்குப் பணம் 13) | 1,398,916 | 180,600,000 | 1,990,596 | 254,000,000 |
| உள்நாட்டு நிதிகளிலிருந்து கிடைத்த காசு ( வாக்குப் பணம் 17) | 147,173 | 19,000,000 | 27,429 | 3,500,000 |
| | 1,546,089 | 199,600,000 | 2,018,025 | 257,500,000 |
| கேள்வி வருமானத்திலிருந்து கிடைத்த காசு | 4,516 | 583,000 | - | - |
| நிகழ்ச்சித்திட்ட செலவுகளிற்காக கொடுத் காசு | (1,738,273) | (224,410,933) | (1,853,510) | (236,507,882) |
| முற்பணங்கள் (தேறிய) | 305,443 | 39,936,639 | (184,047) | (23,403,356) |
| செலுத்த வேண்டியவற்றில் அதிகரிப்பு (செலுத்த வேண்டிய வைப்புக்கள் கேள்வி) | - | 6,224 | - | - |
| வெளிநாட்டு நாணய மாற்று நட்டம் | 2,368 | - | 569 | - |
| செலுத்த வேண்டியவைகளின் அதிகரிப்பு (பிடிகாசு) | (69,243) | (9,059,737) | 93,154 | 11,845,476 |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு | 50,900 | 6,655,193 | 74,191 | 9,434,238 |
| | 50,900 | 6,655,193 | 74,191 | 9,434,238 |
| நிலையான சொத்துக்கள் | (13,128) | (1,716,492) | (13,176) | (1,675,316) |
| நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம் | | | | |
| அமைச்சிற்கு மீளளிக்கப்பட்ட காசு | (37,772) | (4,938,701) | (61,017) | (7,758,923) |
| காசில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு | - | - | - | - |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு நோக்கங்களிற்கான செலவுகளின் பேரேட்டுக் கணக்கு, பிழையான கணக்கீட்டுப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் ரூபா 291,539 ஆன எதிர் மறை மீதியைக் காட்டியது.

### 5.2 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் இல 135 மற்றும் 2013 சனவரி 21 ஆம் திகதிய எஸ்எவ்ஏ/01/2013 ஆம் இலக்க சுகாதார அமைச்சு சுற்றுநிருபம் பந்திகள் 28 மற்றும் 42 | செயறதிட்டப் பணிப்பாளரால் கொடுப்பனவு அங்கீகாரத்திற்கான அதிகார எல்லை ரூபா 2,000,000 ஆகும் எனினும், ரூபா 178,230,654 கூட்டுமொத்தத் தொகையான கொடுப்பனவுகள் குறித்த எல்லைகளை விஞ்சி 29 சந்தர்ப்பங்களில் பணிப்பாளரால் அதிகாரமளிக்கப்பட்டிருந்தது எனினும், சுகாதார அமைச்சிற்கு செயலாளர் 2014 ஒக்தோபரில் மூடு அங்கீகாரம் வழங்கியிருந்தார். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் இல 756 | ரூபா 3,391,808 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பாக பௌதிக மெய்மையாய்வு மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 6. நிதிசார் மற்றும் தொழிற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் தொடர்பான சில முக்கிய புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிக்க உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதிட்டு ஏற்பாடு | ஆண்டில் கிடைத்த நிதிகள் | | 2013 ஆம் ஆண்டில் பயன்படுத்திய நிதிகள் | | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ. டொலர் | ரூபா மில் | ஐ.அ. டொலர் | ரூபா மில் | ஐ.அ. டொலர் | ரூபா மில் | ஐ.அ. டொலர் | ரூபா மில் | ஐ.அ. டொலர் |
| ஜீஎவ்ஏரீஎம் | 15.51 | 1766.58 | 793.88 | 1.398 | 180.60 | 1.39 | 179.99 | 3.402 | 435.05 |
| ஜீஓஎஸ்எல் | - | - | - | - | 19.00 | | 19.00 | - | - |
| | 15.51 | 1,766.58 | 793.88 | 1.398 | 199.60 | 1.39 | 198.99 | 3.402 | 435.05 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 318 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 2.417 மில்லியன் திறைசேரிக்கு கிடைத்திருந்த போதிலும் ரூபா 180.6 மில்லியன் திறைசேரியால் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 180 மில்லியன் மட்டுமே செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் பாதீட்டின் படி, ஐ.அ.டொலர் 5.67 மில்லியன் உலக நிதியத்தால் 2011

யூலை தொடக்கம் 2013 திசெம்பர் வரை செலவிடப்பட வேண்டுமென உலக நிதியத்தால் எதிர்பார்க்கப்பட்டதுடன் செயற்திட்டத்திற்கு ஐ.அ.டொலர் 5.36 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும், மொத்த மானியத்தில் 22 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.அ.டொலர் 3.40 மில்லியன் மட்டுமே செயற்திட்ட காலப்பகுதியில் 45 சதவீதம் முடிவடைந்த பின்னரும் 2013 திசெம்பர் 31 வரை செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மானியத்தின் மீதியான ஐ.அ.டொலர் 12.11 மில்லியன் தொகையை செயற்திட்டத்தின் மிகுதியாகவுள்ள 30 மாத காலப்பகுதியில் பயன்படுத்தப்பட முடியுமா என்பது ஐயப்படவேண்டியதொன்றாகும்.

(ஆ) மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 103,362,884 பெறுமதியான 12 நடவடிக்கைகளிற்கான பாதீட்டு ஏற்பாடு முற்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) ஏனைய 3 நடவடிக்கைகளிற்காக மேற்கொள்ளப்பட்ட பாதீட்டு ஏற்பாடுகள் உரிய தரப்பினர்களிடமிருந்து அங்கீகாரமின்றி ரூபா 30,378,945 ஆல் விஞ்சப்பட்டிருந்தது.

(ஈ) 19 நடவடிக்கைகளிற்காக செயற்திட்டத்தின் பாதீட்டில் ரூபா 666,626,410 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 140,601,704 அல்லது மொத்த ஒதுக்கீட்டில் 21 சதவீதம் மட்டுமே 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 6.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) வழங்கப்பட்ட முற்பணங்கள் மீது செயற்திட்டமானது நிதிக் கட்டுப்பாடுகளில் சிறந்த முறைகளை கடைப்பிடித்திருக்கவில்லை. வழமையாக பல்வேறு நோக்கங்களிற்காக செய்யப்பட வேண்டிய செலவுகளின் மதிப்பீடுகள் முற்பணங்களை வழங்குவதற்கு முன்னர் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, ரூபா 5,640,777 கூட்டுமொத்தத் தொகையான முற்பணங்கள் 12 சந்தர்ப்பங்களில் மதிப்பீடுகளின்றி வழங்கப்பட்டிருந்தன. அதன்விளைவாக ரூபா 125,000 கூட்டுமொத்த முற்பணங்கள் குறித்த நோக்கங்களிற்காக அத்தகைய முற்பணங்களைப் பயன்படுத்தாது ஒரு மாதத்திற்குப் பின்னர் முழுமையாக மீளளிக்கப்பட்டிருந்தன.

(ii) செயற்திட்டத்தின் நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் செயற்திட்டத்தின் நிதிக் கட்டுப்பாடுகளைப் பலப்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) கிடைத்த மானியத்தின் பெறுவனவுகளில் ரூபா 4,938,701 தொகை குறித்த நோக்கங்களிற்காகப் அத்தகைய பெறுவனவுகளைப் பயன்படுத்தாது மீளாய்வாண்டு இறுதியில் பொதுத் திறைசேரிக்கு மீளளிக்கப்பட்டிருந்ததென்று அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கொள்வனவுகள்
(ஆ) இருப்புக்கள்
(இ) நிதிகளின் பயன்பாடு
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) கணக்கீடு
(ஊ) கட்டுநிதிகள் மற்றும் முற்பணங்களின் தீர்ப்பனவு